# வவுனியா-மன்னார் வீதியில் இராணுவ அச்சுறுத்தல்


விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 17 இதழ் 78

யாழ்ப்பாணம் புதன்கிழமை 29 — 04 — 1992


(வவுனியா)

வவுனியா-மன்னார் வீதியில் இராணுவ தாக்குதல் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாவற்குளம், செட்டிக்குளம், நெலுக்குளம் ஆகிய இராணுவமுகாம்கள் தாக்குதலுக்காக உஷார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

மேற்குறிப்பிட்ட முகாம்களுக்கு பெரும் எண்ணிக்கையிலான இராணுவ அணிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இவ்வீதியில் தமிழ்மக்கள் எவரும் நடமாடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன் நடமாடுவோர் சுடப்படுவார்கள் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## சூரிச்சிலும், ஜெனீவாவிலும் புலிகளின் மேதின ஊர்வலம்

(சூரிச்)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் மேதின ஊர்வலங்கள் சூரிச்சிலும், ஜெனீவாவிலும் வெள்ளிக்கிழமைநடைபெறவுள்ளது.

சூரிச்சில் காலை 10 மணிக்கு ரயில் நிலயத்திர்கு அருகிலிருந்தும், ஜெனீவாவில் பி.ப 2 மணிக்கு ரயில் நிலையத்திற்கு அருகிலிருந்தும் மாபெரும் ஊர்வலங்கள் நடைபெறவுள்ளன.

மிகச் சிறப்பாக நடைபெற ஏற்பாடாகியுள்ள இப்பேரணிகளில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பிரான்ஸ் தலைநகர் பாரிஸிலும் புலிகளின் மேதின ஊர்வலங்களுக்கும் கூட்டத்திற்கும் விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (சி)

# வடகடல் பிராந்தியத்தில் மீன்பிடிக்க முற்றாகதடை

(கொழும்பு)

வடகடல் பிராந்தியத்தில் மீன் பிடிப்பது முற்றாக தடைசெய்யப்பட்டிருப்பதாக வடமாகாணத்தின் ஆணை பிறப்பிக்கும் அதிகாரி நேற்று விசேட அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளார்.

இந்த அறிவித்தலின் படி பின்வரும் கடல் பிரதேசங்கள் மீனவர்களின் தடை செய்யப்பட்ட பிரதேசங்களாக மறுஅறிவித்தல் வரை பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. திருவாற்று நிலம், மடக்கல், தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, தும்பளை ஆகிய பிர

(4-ம் பக்கம் பார்க்க)

## ‘குமண’ கொழும்பு செல்கிறது!

(யாழ்ப்பாணம்)

குமணக்கப்பல், நோயாளர்களை ஏற்றிக்கொண்டு அடுத்த மாதம் 5ம் திகதி கொழும்பு செல்கின்றது.

[4-ம் பக்கம் பார்க்க]

## மடு அகதிமுகாமில் நீர் பற்றுக்குறை

(மன்னார்)

மடு அகதி முகாமில் நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் அங்குள்ள அகதிகள் வேறிடங்களுக்கு செல்வதற்கு முயற்சி செய்து வருகிறார்கள்.

இம் முகாமில் வயிற்றோட்டம், வாந்திபேதி போன்ற தொற்றுநோய்கள் பரவிவருவதினாலும் அகதிகள் பெரும் துயரத்தை அனுபவித்து வருகின்றனர்

28,000 மக்கள் வாழ்ந்த இம்முகாமில்தற்போது 16,000 பேர் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## பிக்குகள் குழுவின் சமாதான விஜயம் வெற்றியளிக்கவில்லை

(கொழும்பு)

பௌத்த பிக்குகளின் யாழ்ப்பாண விஜயம் வெற்றியளிக்கவில்லையென்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிக்குகள் குழு தெரிவித்த யோசனைகள் புலிகளால் நிராகரிக்கப்பட்டதுடன் இவ்விஜயத்தின்போது புலிகளின் பாதுகாப்பிலிருக்கும் 40 பொலிஸாரையும், ஒரு இராணுவ சிப்பாயையும் விடுவிக்கும் முயற்சி எதுவும் வெற்றி

(4ம் பக்கம் பார்க்க)

## நிலுவையின்றி சோலைவரி அறவிட நடவடிக்கை

(கொழும்புத்துறை)

வரியிறுப்பாளர்களிடமிருந்து நிலுவையின்றிச் சோலை வரிப்பணம் அறவிடுவதற்கான சகல நடவடிக்கைகளையும்

(4-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக் குழுவிலிருந்து சிறீலங்கா சுதந்திரக்கட்சி வெளியேறவேண்டும்

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக் குழுவிலிருந்து சுதந்திரக்கட்சி வெளியேறவேண்டுமென கம்பஹா மாவட்ட எம். பி. திரு ஜெயராஜ்பெர்ணன்டோபுள்ளே நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்னை தீர்வை முடிவிற்கு கொண்டு வர நாடாளுமன்ற தெரிவுக்குழுவே சிறந்ததென கூறி சுதந்திரக்கட்சியே இதனை ஏற்படுத்தியிருந்தது.

அம்பாறை, மஹரகம குண்டு வெடிப்பில் சுதந்திரக் கட்சி பின்னணியில் உள்ளதாக அரசாங்கம் தெரிவித்திருப்பதை அடுத்தே இக்கோரிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது சுதந்திரக் கட்சியின் நடவடிக்கை, பிரச்னையை இழுத்தடிக்கும் முயற்சியாகவே அமைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தாயகம் திரும்ப 2000 பேர் காத்திருப்பு

(சென்னை)

இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட இலங்கைதமிழ்அகதிகள் தாயகம் திரும்புவதற்கு மண்டபம் அகதிகள் முகாமில் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் இலங்கைத் தமிழ் அகதிகளின் 14வது குழு நேற்று இராமேஸ்வரத்திலிருந்து எம். பி. இராமானுஜம் என்ற கப்பலில் மன்னார் நோக்கிப் புறப்பட்டுள்ளதாகவும் 156 குடும்பங்களைச் சேர்ந்த 622 பேர் இக்கப்பலில்

(4-ம் பக்கம் பார்க்க)

## சம்பூரில் இருவர் கைது

(மூதூர்)

மூதூரைச் சேர்ந்த சம்பூரில் கடந்த 22, 23ம் திகதிகளில் இரண்டு தமிழ் இளைஞர்கள் சிறிலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்பட்டனர்.

அடைக்கலம் திருச்செல்வம் (வயது 20), சித்திரவேல் புவனேசுவரன் (வயது 21) ஆகியோரே படையினரால் பிடித்துச் செல்லப்பட்டவர்களாவர்.

## இரு உறுப்பினர்கள் வெளியேறியுள்ளனர்

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக் குழுவிலிருந்து சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் இருவர் வெளியேறியுள்ளனர்.

கட்சியின் செயலாளர் திரு. தர்மசிறி சேனநாயக்காவும், நாடாளுமன்ற கொறடா திரு. ரிச்சாட் பத்திரனவுமே இவ்வாறு அதிருப்தியுற்று வெளியேறியவர்களாவார்கள்.

இவர்களது இடத்திற்கு திகாமடுல்ல எம்.பியான திரு. டி. ஏ. கே. தேவரப்பெருமாவும், திருமலை மாவட்ட எம். பி, திரு. ஏ. எஸ். குணவர்த்தனவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 1500 தமிழ் அகதிகள் விமானத்தில் அனுப்பப்படுவர்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் இன்று புதன்கிழமை முதல் விமானம் மூலம் அனுப்பி வைக்கப்படுவார்கள்.

மொத்தம் 1500 அகதிகளை விமானம் மூலம் பகுதிபகுதியாக அனுப்பிவைக்க இந்தியா நடவடிக்கை எடுத்துள்ளது.

அக்பர் என்ற கப்பல் தற்

[4-ம் பக்கம் பார்க்க]

## தொழில் இழந்தோருக்கு நஷ்டஈடு வழங்கப்படும்

(கொழும்பு)

குவைத்தில்தொழில் வாய்ப்புகளை இழந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு இலங்கைவெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் ஏற்பாடுகளை செய்திருக்கிறது.

வேலையிழந்தோரில் சுமார் 78 ஆயிரம் பேர் பற்றிய விபரங்கள் பெறப்பட்டிருக்கின்றன.

முன்னர் குவைத்தில் வேலை செய்த 15 ஆயிரம் பேர் சம்பந்தமாக தேவைப்படும் தகவல்கள் இதுவரை பெறப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கியநாடுகள் சபை நஷ்டஈடுக்குழுவுக்கு இந்த ஆண்டு ஜூன் மாதம் வரை ஒரு முழுமையான பட்டியலை இந்தப் பணியகம் சமர்ப்பிக்கவிருக்கிறது.

நஷ்ட ஈட்டுத்தொகை அது கொடுக்கப்படவேண்டிய தொகை ஆகியவை பற்றி நஷ்டஈட்டுக்கான ஆணைக்குழுவே முடிவு செய்யும்.

## வடக்கு - கிழக்கு நிரந்தர இணைப்பிற்கு நிபந்தனை விதிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்பிற்கு சுதந்திரக்கட்சி நிபந்தனை விதித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தை ஊவா மாகாணத்துடன் இணைத்தால் வடக்கு- கிழக்கு இணைப்பை சுதந்திரக்கட்சி ஆதரிக்குமெனவும் அக்கட்சி வலியுறுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை வடக்கு-கிழக்கு இணைப்பை மக்கள் ஐக்கிய

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

2 முதிரை அலுமாரி, 1சோக் கேஸ் விற்பனைக்குண்டு தொடர்பு: த. ஐயம்பிள்ளை, 49/4, யாழ்றோட், யாழ்ப்பாணம், (சிறுவர் படமாளிகை பின் பக்கம்.) (சி 6226

A/L கடந்தகால வினாவிடை (உயர் கல்விப் பதிப்பக வெளியீடு) 1–5 வரை தமிழ், கணிதம், தம்பிராசா 7–ம் சமூகக் கல்வி – சந்திரசேகரம் 7–ம், 8–ம் சுகாதாரக் கல்வி செல்வநாயகம் பிரான்சிஸ் காரைக்கால் அம்மையார் புராணம். காவல்வேலி உ. வே. சாமிநாத ஐயர் உரை ரமணிச்சந்திரன் லக்ஷ்மி நாவல்கள், பாலாஜி புத்தகசாலை, 27, மின்சார நிலைய வீதி, 15/5 முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [ஏ–2102]

### சோதிடம்

உங்கள் எதிர்காலம் பற்றி சிந்திக்கும் நேரத்தில் வேலணை சோதிடர் V A. சிவராசா என்பவரை ஒரு முறை சந்தித்துப் பார்த்தாலென்ன? 152 B அரசடி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். (சி-6225)

### மணமகள் தேவை

கூடிய பாவம் 7ல் செவ்வாய் 38 வயதுடைய விவசாயம் செய்யும் வசதி கூடிய மணமகனுக்கு அதே கிரக பாவமுள்ள பெண் தேவை. இலட்சுமி திருமணசேவை, செ. விஜயரத்தினம், நவாலி கிழக்கு, மானிப்பாய். (சி 6221)

## செயலக ஊழியர் மேதின ஏற்பாடு

(மானிப்பாய்)

யாழ். செயலக ஊழியர்கள் மே தினத்தை சிறப்பாகக் கொண்டாடுவதென்று தீர்மானித்துள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை செயலக நலன்புரிச்சங்கத்தினர் மிகத்துரிதமாக மேற்கொண்டுவருகின்றனர்.

இது சம்பந்தமான கலந்துரையாடல் கூட்டமொன்றும் கடந்த வியாழக்கிழமை செயலக ஆலோசனை மண்டபத்தில் இடம்பெற்றது. (71)

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடாத்திவரும உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம்:

திருமலை நட்சத்திரங்கள் அணியை எதிர்த்து அளவெட்டி விநயகர் அணி சுன்னாகம் ஸ்கந்தா கல்லூரி மைதானத்தில் மோதுகின்றது.

## மெய்வல்லுநர் போட்டி

(உடுவில்)

மல்லாகம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி மல்லாகம் பாஸ்கரன் விளையாட்டரங்கில் அதிபர் திரு. ஆ. கமலநாதன் தலைமையில் நடைபெற்றது. பிரதமவிருந்தினராக் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. மகேசவேலு கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர் திரு க. நாகமணி, இளைப்பாறிய அதிபர் திரு. அ. மகாதேவா, மல்லாகம் கிராம அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு சு. பாஸ்கரன் ஆகியோர் உரையாற்றினர். திருமதி சற்குணம் மகேசவேலு பரிசில்கள் வழங்கினர். (109)

## யாழ். ப.நோ.கூ. சங்கத்தில் பெருமளவில், அரிசி மா தேங்கியுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ். ப நோ. கூ. சங்கத்தில், அரிசியும், மாவும் பெருமளவில் தேங்கிக்கிடப்பதாக தற்போது தெரியவந்துள்ளது,

இப்பொருட்களுடன் பொது மக்களுக்கு தேவையான சீனியையும் சேர்த்து விற்பனை செய்யமுடியாமல் இருப்பதினாலேயே, மேற்படி பொருட்களை வாங்குவதற்கு மக்கள் முன்வராமல் இருக்கின்றார்கள் என்று கூறப்படுகிறது.

இதேநேரம், யாழ். நகரிலுள்ள வர்த்தக நிலையங்களின் விற்பனை கிளைகளில் தேவையான அளவு சீனி விற்பனை செய்யப்படுவதினால், கூடுதலான மக்கள் அங்கு சென்று இப்பொருட்களை வாங்குகின்றார்கள் என்று யாழ். ப. நோ. கூ. சங்க முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

வர்த்தகத் திணைக்களத்துக்கு தேவையான சீனியை வழங்கும் யாழ் செயலகம் கடந்த இரு மாதங்களாக எமது சங்கத்துக்கு எதுவித சீனியும் வழங்குவதற்கு முன்வராததினாலேயே அரிசியும், மாவும் எம்மிடம் தேங்கிக் கிடப்பதற்கு முக்கிய காரணமாகும் என்று கூறினர். (வி)

## வெள்ளிக்கிழமை விடுமுறை: பொதுமக்களிடமிருந்து அபிப்பிராயம் கோரப்படுகிறது

(கொழும்புத்துறை)

வெள்ளிக்கிழமையை விடுமுறைதினமாக்குமாறு விடுக்கப்பட்டிருக்கும் கோரிக்கை பற்றிப் பொதுமக்களிடமிருந்து பகிரங்க அபிப்பிராயத்தை யாழ். மாவட்ட இந்து இளைஞர்பேரவை கோரியுள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஆட்சிக்குழுக்கூட்டம் பேரவைத் தலைவர் திரு. வே. கெ. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றபோது வெள்ளிக்கிழமையை விடுமுறை தினமாக்கக் கோரி ஸ்ரீலங்கா அரசைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானத்திற்கு அதிக ஆதரவு கிடைத்துள்ளதாகவும், இக்காரியம் பற்றி நாளை 30–ந் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் பொதுமக்களிடமிருந்து அபிப்பிராயங்களைப் பெறுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இந்து சமயத்தவர்களின் புனிததினமான வெள்ளிக்கிழமையை அரச விடுமுறை தினமாகுவது பற்றிய தங்கள் சிந்தனைக்குரிய கருத்துக்களைச் சகல இந்து இளைஞர் மன்றங்கள், இந்து சமய நிறுவனங்கள்யாவும் எழுத்துமூலம் திரு. சி. சி. வரதராசா, பொதுச்செயலாளர், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

## கலைஞர்களுக்கு கௌரவம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை பங்குரு கந்தசுவாமியார் தேவஸ்தானத்தில் நடைபெற்ற மகாகும்பாபிஷேக விழாவில் பிரதம சிவாசாரியார் முத்தமிழ்குருமணி நா. சர்வவேஸ்வரக் குருக்களும் ஆலயத்தில் தொடர்ந்து அறுபது ஆண்டுகள் கடமையாற்றிய யா. சடாட்சரக்குருக்களும் தங்கப்பதக்கம் அளித்து கௌரவிக்கப்பட்டனர்.

சைவமணி சி. சபாநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் நாதஸ்வர வித்துவான் என். கே. பத்மநாதன், சிற்பக்கலைஞர் திரு. தம்பிராசா, ஓவியர் திலகம் சுந்தரலிங்கம் ஆகியோரும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். (139)

## 31வது வருட சிரார்த்ததினம்

[யாழ்ப்பாணம்]

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபரும், யாழ். பொதுநூல் நிலைய ஸ்தாபகர்களில் ஒருவருமான வண. லோங் அடிகளாரின் 31வது வருட சிரார்த்த தினம் நாளை வியாழக்கிழமை 30ம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் காலை சென் பற்றிக்ஸ் கல்லூரி தேவாலயத்தில் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்பு மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்க மண்டபத்திலுள்ள வண லோங் அடிகளாரின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து பாராட்டுக் கூட்டமும் நடைபெறவுள்ளது. [வி]

## கொற்றுவத்தை சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

கொற்றுவத்தை கலைவாணி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் இறுதி விளையாட்டுப் போட்டிகளும், பரிசளிப்பு விழாவும் நிலையத் தலைவர் திரு. எம். கதிரமலை தலைமையில் நடைபெற்றது.

நிலைய முன்னாள் தலைவர் திரு. கி. பூபாலன் கழகக் கொடியையும், மாவீரர் ஐஸ்ரீஸின் தந்தை திரு. எம். கிருஷ்ணபிள்ளை தமிழீழ தேசியக் கொடியையும் ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

தமிழீழக் கடற் பிராந்தியத் தளபதி திரு சூசை விழாவிலே பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்கினார். உள்ளூர் போட்டிகளில் சாம்பியனுக்கான தெரிவில் முதலாவது இடத்தை ப. மணிவண்ணனும், இரண்டாவது இடத்தை சி இளஞ்சேரனும் பெற்றுக்கொண்டனர். வெளியூர் கழகங்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை கரவெட்டி அத்துளு அம்பாள் விளையாட்டுக்கழகமும், இரண்டாமிடத்தை பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டன. டாக்டர் கே. வேலும்மயிலும் நன்றி கூறினார். (52)

## பிரதேச சபையில் செயற் திட்டங்கள்

(உடுவில்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட உபநிலையங்களில் 1992ம் ஆண்டுக்கான மூலதன வேலை செயற்திட்டங்களை அமுல்படுத்துவது சம்பந்தமாக கலந்துரையாடல் நிகழ்ச்சியொன்று சுன்னாகம் உபஅலுவலக கட்டடத்தில் அண்மையில் நடைபெற்றது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளர் செல்வி தனுஜா தணிகாசலம் நடைபெற்ற இக் கூட்டத்தில் உடுவில், சுன்னாகம், ஏழாலை உபஅலுவலங்களின் பொறுப்பதிகாரிகள் சனசமூகநிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், கிராம முன்னேற்ற சங்கங்கள் போன்ற ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சி மன்றங்களைப் பொறுத்தவரை தற்போதைய சூழ்நிலையில் சுகாதார மேம்பாட்டுக்கான திட்டம், பாலர் பாடசாலை அபிவிருத்தித்திட்டம், குடிநீர்வசதி. போன்றவற்றின் அபிவிருத்தி ஆகியவற்றுக்கு மூலதனவேலை செயற்றிட்டங்களில் முன்னுரிமை வழங்கப்படவேண்டுமென வடக்குகிழக்குமாகாண உள்ளூராட்சித்திணைக்கள ஆணையாளர் அறிவித்ததை தொடர்ந்து பிரதேசசபைகளின் விசேட ஆணையாளர்களால் அபிவிருத்தி வேலைகளுக்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கென இவ்வருடத்துக்கு வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு அறு லட்சம் ரூபா வரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இத்தொகையை இப்பிரதேச சபையின் உடுவில், சுன்னாகம், ஏழாலை உபநிலையங்களுக்கு பங்கிட்டு வழங்கி அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்நிதியை கொண்டு இவ் உபநிலையங்களுக் குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து சனசமூக நிலையங்களுக்குமான நன்கொடைகள், நூல்நிலைய நன்கொடைகள் வழங்கப்படும் என விசேட ஆணையாளர் எடுத்துக் கூறினர். (109)

## இன்றைய சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி கோவில் உபயமாக வடக்கே ட்டை பங்குருப்பதி அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணியப்பெருமான் கோவிலில் விசேட அபிடேகமும், தீபாராதனையும் சுவாமி வீதி உலா வருதலும் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாள திரு. இ. ஜெயராஜும் காரை கம்பன் கழக அமைப்பாளர் திரு. ரி. சிவராசனும் சொற்பொழிவாற்றுவார்கள். செல்வி பவிதா, திருப்புகழூர் சிங்கத்தின் நடன நிகழ்ச்சியும் நடைபெறும்.

## வருடாந்த உற்சவம்

(மானிப்பாய்)

சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று 29ந் திகதி புதன் காலை 11-30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து நடைபெறும் இவ் உற்சவத்தின் பதினேழாம் நாளகிய மே மாதம் 15ந் திகதி ரதோற்சவமும் 16ந் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (71)

## கலந்துரையாடல்

(வட்டுக்கோட்டை)

வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்க வட்டுக்கோட்டை கிளையினர் இன்று புதன் கிழமை காலை 9–00 மணியளவில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் மேதின, முத்தமிழ் விழா பற்றிய கலந்துரையாடல் ஒன்றினை நடத்தவுள்ளனர்.

இக்கலந்துரையாடலின் முக்கிய பல விடயங்கள் ஆராயப்படவிருப்பதால் சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மேற்படி சங்கக்கிளைச் செயலாளர் திரு. சி. சின்னராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

மேதினத்தன்று மருதனார் மடத்திலிருந்து ஆரம்பமாகவுள்ள மேதின ஊர்வலத்தில் முறைசாராக் கல்விப் பிரிவு மாணவர்களும், போதனாசிரியர்களும் பங்குபற்றவுள்ளனர்.

இத்தினத்தைச் சிறப்பாக ஒழுங்கு செய்யும் பொருட்டு இன்று 29ம் திகதி காலை 9-30 மணிக்கு நடக்கும் கலந்துரையாடலில் முறைசாராக் கல்விப் பிரிவில் போதனாசிரியர்களையும் மாணவர்களையும் ஒன்று கூடுமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு, ச. சுப்பிரமணியம் கேட்டுள்ளார். (சு)

## அபிவிருத்திப் பாசறை

(யாழ்ப்பாணம்)

யாழ். மரியன்னை பேராலய பங்கைச் சேர்ந்த ஆசனக் கோவில், ஆரோக்கியநாதர் கோவில், செபஸ்தியார் கோவில், உத்தரமாதா கோவில் தலைமைத்துவ அபிவிருத்திப் பாசறை மேமாதம் 16 ம், 17–ம் திகதிகளில் காலை 8–30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறும்.

## மாணவருக்கு சீருடைகள்

(உடுவில்)

வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட அகதி முகாம்களில் தங்கி இருந்து கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு இரண்டாம் தவணையின் போது சீருடைகள் வழங்கப்பட உள்ளன,

சர்வோதய இயக்கத்தினரால் வழங்கப்படும் இச்சீருடைகள் முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கே வழங்கப்படும்.

மாணவ–மாணவிகளுக்கு சீருடைகளை வழங்குவதற்காக சர்வோதய இயக்கத்தினரால் இயக்க பணியகத்தில் தையல் நிலையம் அமைக்கப்பட்டு. சீருடைகள் வேகமாகத்தயாரிக்கப்பட்டு வருகின்றன. (109)

## சம்பளம் வழங்கவில்லை

(பருத்தித்துறை)

யாழ். புடவைக் கைத்தொழில் திணைக்களத்தில் நெசவுப் போதனாசிரியர்களாகப் பணியாற்றும் சேவை நீடிப்பாளர்களுக்கு நாலு மாதச் சம்பளம் வழங்கப்படாமையினால் அக்குடும்பங்கள் கஷ்டங்களை அனுபவித்து வருவதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது. (52)

## கூட்டம்

(மானிப்பாய்)

நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய், சுதுமலை சண்டிலிப்பாய் ஆகியவற்றின் இந்து சமய அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் கடந்த 26ந் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இதன் புதிய தலைவராக திரு. சி. விஸ்வலிங்கம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (71)

# எழுச்சியான மேதினத்தைக் கொண்டாட சிறந்த முறையில் ஏற்பாடு நடக்கிறது

## அலங்கார ஊர்திகள் அணிவகுக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் இம்முறை நடைபெறவிருக்கும் மேதின ஊர்வலத்திலும் கூட்டத்திலும் ஒரு லட்சத்துக்குமதிகமான மக்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்தகாலங்களில் நடைபெற்ற 'மே தினக் கொண்டாட்டங்களைவிட, இம்முறை மிக எழுச்சியான முறையிலும் விரிவான முறையிலும் மேதினத்தை நடாத்துவதற்கு பல முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### ஊர்திகள்

யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இருந்து இம்முறை நடைபெறவிருக்கும் மேதின ஊர்வலத்தில் 100க்கும் அதிகமான ஊர்திகள் பங்குபற்றுவதுடன் சுன்னாகம் சந்தியில் இருந்து யாழ் பல்கலைக்கழக வளாக மைதானம் வரையிலுமுள்ள முக்கிய சந்திகளில் அலங்கார வளைவுகள் நிறுவப்படுவதுடன் பல நிறுவனங்களின் சார்பில், 200 யாருக்கு ஒரு தண்ணீர்ப் பந்தல்களும் அமைக்கப்படவுள்ளன.

மே தின ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்வதற்காக தூர இடங்களிலிருந்து வரும் பொது மக்களுக்கு இலவச போக்குவரத்து சேவையை நடாத்த நூற்றுக்கும் அதிகமான வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இரவு நேரங்களில் மக்கள் வசதியாக வீதிகளில் போக்குவரத்து செய்வதற்காக, விசேட மின்விளக்குகள் சகல பகுதிகளிலும் பொருத்தப்படவுள்ளன.

### கலை நிகழ்ச்சிகள்

மேதின ஊர்வலம் ஆரம்பமாகி, முடிவடையும்வரை, யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் அமைக்கப்படும் விசேட மேடையில், பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

### வீதிப் போக்குவரத்து ஒழுங்குகள்

வீதிப் போக்குவரத்துக்களை கண்காணிப்பதற்காக, தமிழீழக் காவல்துறையின் விசேட பிரிவும், சாரணர், தொண்டர் குழுவினர்களும் செயல்படவுள்ளனர். முதலுதவி சிகிச்சைகளுக்காக சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரும், அம்புலன்ஸ் வண்டிகளும் முக்கிய இடங்களில் நிறுத்திவைக்கப்பட இருக்கின்றன.

இம்முறை நடைபெறும் மேதினப் பொதுக்கூட்டத்தில் பல தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும் உரையாற்றவுள்ளார்கள்.

மொத்தத்தில் இம்முறை 'மே' தின விழா ஈழத்தின் வரலாற்றில் ஒரு மைல்கல்லாக இருக்கக்கூடிய விதத்தில் சகல ஏற்பாடுகளும் வெகு துரிதமாகவும், சிறப்பாகவும், அவதானமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (வி)

## மேதின அலங்கார கொட்டகை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய பொதி சுமக்கும் வாகன சங்கத்தினர் மேதினத்தை யொட்டி மருதனார் மடம் சந்தியில் அலங்கார கொட்டகை ஒன்றை அமைக்க முன்வந்துள்ளார்கள். (சு)

## சங்கானையில் சிறுவர் நூல் நிலையம் அமைக்க முடிவு

(வட்டுக்கோட்டை)

''வலிகாமம் மேற்குப் பிரிவிலே சங்கானை ஒரு பிரதானமான பிரதேசமாக இருந்தும் சிறுவர்களுக்கான ஒரு நூல் நிலையம் இல்லாதிருப்பது பெரும் குறையாகவே அமைந்துள்ளது. இக்குறையை சங்கானை பொது நூலக வாசகர் வட்டம் நிவர்த்திசெய்ய முன்வர வேண்டும்''

சங்கானை பொது நூலக வாசகர் வட்ட விசேட கூட்டத்திற்குத் தலைமை தாங்கி தலைமையுரை நிகழ்த்திய சைவப் புலவர் திரு நா. க. தங்கரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

பிரிவு நிழல் நிர்வாக விடய இணைப்பாளர் திரு. இ கலாநேசன், இளைப்பாறிய ஆசிரியர் கார்த்திகேசு, டாக்டர் சோமசுந்தரம் உட்பட மற்றும் பலரும் ஆலோசனை வழங்கினர்.

சிறுவர் நூல் நிலையம் ஒன்றை பொதுநூலகத்தோடு இணைத்து அமைப்பதென்றும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. (139)

# புலிகளின் ஆயுத போராட்டம் சர்வதேச கவனத்தை ஈர்க்கின்றது - இளம்பரிதி

(சித்தன்கேணி)

''சர்வதேச நாடுகளுக்கு எமது போராட்டத்தின் திறமையும், நாம் மேற்கொள்ளும் கெரில்லா யுத்தமும் ஆச்சரியமாக இருப்பதுடன் எமது வளர்ச்சியைக் கண்டு சர்வதேச நாடுகள் அதிசயமடைந்தும் உள்ளன. எமது ஆயுதப் போராட்டத்தைக் கண்டு அதிசயமடைந்த மாதிரி மக்களின் எழுச்சியையும் கண்டு சர்வதேச நாடுகள் ஆச்சரியப்படக் கூடியவாறு வருகின்ற மேதினத்தை நாம் எல்லோரும் ஒன்றிணைந்து கொண்டாடவேண்டியது அவசியம் ஆகும்.''

இவ்வாறு யாழ். மாவட்டத் தளபதி திரு. இளம்பரிதி மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் குறிப்பிட்டார்.

மேதினம் தொடர்பாக அரசாங்க, வங்கி அலுவலர்களிடையே நடாத்தப்பட்ட கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய திரு. இளம்பரிதி கூறியதாவது:-

அமெரிக்கா வல்லரசு நாடாக இருந்தும், இந்தியாவிடம் எவ்வளவு விலை கொடுத்தும் இந்தியப் படையினருக்கும், எம்மவருக்கும் இடையே ஏற்பட்ட யுத்தத்தில் இந்தியா பெற்ற கெரில்லா ப்பயிற்சியையும் அனுபவத்தையும் வாங்கத் தயாராக இருக்கின்றது. சகல சர்வதேச நாடுகளும் எமது போர்த் திறமையைக் கண்டு ஆச்சரியமடைந்துள்ளன. இதேபோல மக்களின் எழுச்சியையும் சர்வதேச நாடுகளுக்குத் தெரியப்படுத்தவேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும். (137)

## பருத்தித்துறை வைத்தியசாலைக்கு புதிய ஜெனரேட்டர்

[பருத்தித்துறை]

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையால் சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு சுமார் 53,000 ரூபாவுக்குக் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்ட புதிய ஜெனரேற்றரை பிரான்ஸ் வைத்திய சேவைக் குழு பருத்தித்துறைக்குக் கொண்டுவந்துள்ளது.

தற்பொழுது இவ்வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைக் கூடத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஜெனரேற்றர் பழுதடையும் நிலையில் இருப்பதனாலேயே வைத்தியசாலை அபிவிருத்திச் சபை புதிய ஜெனரேற்றரைக் கொள்வனவு செய்வதற்கு பிரான்ஸ் வைத்திய சேவைக் குழுவுடன் தொடர்பு கொண்டிருந்தது.

இப்புதிய ஜெனரேற்றரை வெகுவிரைவில் சத்திரசிகிச்சைக் கூடத்தில் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை வைத்தியசாலை அபிவிருத்திச்சபை மேற்கொண்டுள்ளது. (52)

## சைக்கிள் கடை தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சைக்கிள் கடை ஒன்று தீக்கிரையாகியுள்ளது. இச்சம்பவம் கடந்த திங்கள் இரவு நடைபெற்றதாகத் தெரிய வருகிறது.

ஊர்காவற்றுறையிலிருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள கடை உரிமையாளர் யோசவ் அந்தோனிப்பிள்ளை இதுபற்றி காவல் பணிமனையில் முறைப்பாடு செய்துள்ளார் (59)

# காபூல் வீதிகளில் தொடர்ந்து போட்டிக் குழுக்கள் யுத்தம்

(காபூல்)

ஆப்கானின் தலைநகர் காபூலை கைப்பற்றவும் ஆட்சியை பிடிப்பதற்குமாக போட்டிக் குழுக்களிடையே மிக உக்கிரமான மோதல்கள் தொடர்ந்தவண்ணமுள்ளன.

இம்மோதலில் நூற்றுக்கும் மேற்பட்டோர் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர் இரவு பகலாக தலைநகர் வீதியெங்கும் குண்டுச் சத்தங்களும், துப்பாக்கிச் சத்தங்களும் கேட்டவண்ணமுள்ளன.

புதிய ஆட்சியாளர்களுக்கும் கடும்போக்கை கடைப்பிடிக்கும் அடிப்படைவாதிகளுக்குமிடையிலேயே இந்த மோதல் தொடர்கிறது. இருதரப்பினரும் யுத்தநிறுத்தந்தை அலட்சியம் செய்துள்ளனர். போரிடும் குழுக்களின் தளபதிகள் தமக்கு யுத்தநிறுத்த அறிவிப்பு எதுவும் தரப்படவில்லை எனக் கூறியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி நஜீபுல்லா பதவி விலகியதை தொடர்ந்தே இந்த ஆட்சிப் போட்டி ஏற்பட்டுள்ளது. (சி)

# பிரிட்டனின் முதல் பெண் சபாநாயகர்

(லண்டன்)

பிரிட்டனில் முதல்தடவையாக பெண் சபாநாயகர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் நடந்த பொதுத்தேர்தலில் எதிர்க்கட்சியான தொழில்கட்சி சார்பில் வெற்றிபெற்ற திருமதி வெத்தி புத்ராய்ட் நாடாளுமன்றத்தின் 1-வது பெண் சபாநாயகராக நேற்று முன்தினம் தெரிவு செய்யப்பட்டார்.

சபாநாயகர் பதவிக்கு திருமதி புத்ராய்ட்டைவிட மூன்று ஆண்களும் இப்பதவிக்கு போட்டியிட்டதும் குறிப்பிடத்தக்கது. (சி)

# நேபாள பிரதமரின் காருக்கு கல் வீச்சு

(காட்மண்டு)

நேபாள பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா பயணம்செய்த கார் கம்யூனிஸ்டுகளின் கல்வீச்சுக்கு இலக்காகியுள்ளது.

அதிர்ஷ்டவசமாக பிரதமர் காயம் எதுவும் இன்றி தப்பிவிட்டார் என்றும அவருடன் பயணம் செய்தோர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

காரின் கண்ணாடிகள் யாவும் நொருக்கப்பட்டுள்ளதாகவும் கார் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக கம்யூனிஸ்டுகள் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (க)

## உணவு, தபால்களுடன் 'குமண'க் கப்பல் வந்தது

(யாழ்ப்பாணம்)

நீண்ட நாட்களின் பின்பு பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு நேற்று முன்தினம் வந்துள்ள குமண என்ற கப்பலில் உணவுப் பொருள்கள், எரிபொருள்கள், தபால் பொதிகள் உட்பட பல நிறுவனங்களுக்குமான பொருள்கள் வந்துள்ளன.

மேற்படி கப்பலில் வந்துள்ள தபால் பொதிகள் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டு இன்று விநியோகம் நடைபெறுமென்றும் யாழ். பிரதம தபால் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இக்கப்பலில் யாழ். செயலகத்துக்கு வந்துள்ள உணவுப் பொருள்களின் விபரம் வருமாறு:- அரிசி 1158 மெற்றிக் தொன், மாவு 1300 மெ. தொ. சீனி 200 மெ. தொ, பருப்பு 100 மெ. தொ, பால் மாவு 98 மெ. தொ, சவர்க்காரம் 05 மெ. தொ. தேயிலை 10 மெ. தொ. (வி)

## சைக்கிள் திருட்டு

(மானிப்பாய்)

நவாலியில் வீட்டு முற்றத்தில் விடப்பட்டிருந்த புதிய லேடிஸ் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை சிற்றம்பலம் என்பவர் வீட்டு முற்றத்தில் தமது சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே இருந்த சமயம் இத் திருட்டு இடம்பெற்றது. (71)

## முத்திரைகள் வான்கடிதங்கள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில் போதுமான அளவு முத்திரைகள், வான் கடிதங்கள் என்பன கையிருப்பில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. [72]

## இராசி பலன்

29/04/1992

புதன்கிழமை

(தமிழுக்கு சித்திரை 17)

துவாதசி: முன் இரவு 11-23 வரை, பூரட்டாதி: முற்பகல் 10-39 வரை, அமிர்த சித்தயோகம், இராகுகாலம்: காலை 11-58 முதல் 1-28 வரை, சுபநேரம்: மாலை 4-28 முதல் 5-58 வரை.

மேஷம்: கௌரவ மேன்மை, பணவரவு, தொழில் சிறப்பு.

இடபம்: சகோதரர் மகிழ்ச்சி, தெய்வபக்தி, காரிய சித்தி.

மிதுனம்: பிறர் தொல்லை, ஆரோக்கிய குறைவு, அலைச்சல்.

கடகம்: தொழில்போட்டி, குடும்பபிரிவு, வெறுப்பு.

சிங்கம்: மனைவியால் மதிப்பு, கடன் வசூல், சுப காரியம்.

கன்னி: கடமை உணர்வு, நிம்மதி, இனசன மகிழ்ச்சி.

துலாம்: அதிகாரிகள் தொல்லை, இடையூறு, மனச் சுமை.

விருச்சிகம்: குடும்ப கவலை, அற்பர் நேசம், வெறுப்பு.

தனுசு: ஆள் அடிமை, பழிச்சொல், காரியசித்தி.

மகரம்: ஒத்துபோகாமை, வீண்வாதம், கணவலி.

கும்பம்: உயர்ந்த வெகுமதி இடம்பெயர்வு, வெற்றி.

மீனம்: தப்பபிப்பிராயம், மறைமுக நட்பு, பாச உணர்வு.

ஜோஸ்யர்

# "அடக்குமுறைகளை உடைத்து சுதந்திர தாயகத்தை மீட்க ஓரணியில் சேரவேண்டும்"

## பரா மேதின அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

அரசின் அடக்கு முறைகள் அனைத்தையும் உடைத்தெறிந்து எமது சுதந்திர தாயகத்தை மீட்க நாம் ஓரணியில் சேரவேண்டும்'' என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கொள்கைமுன்னெடுப்பு பிரிவு பொறுப்பாளர் திரு. பரா புலிகளின் குரல் வானொலியில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது;

மே முதலாம் திகதி நடைபெறவிருக்கும் 'மே' தினமானது தமிழ் பேசும்தொழிலாள வர்க்கத்தின் விடுதலை உணர்வுக்கு வித்திட்ட நாளாக அமைய வேண்டும்.''

இவ்வருட மேதினமானது எமது மக்கள் தங்களது துயரத்தை உலகிற்கு எடுத்துக் காட்டும் நாளாக அமைய வேண்டும்.

எமது இனமோ எமது உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் எமது உரிமைகள் அழிக்கப்பட்ட நிலையில் எங்களுடைய உரிமையை நிலைநாட்ட எங்களுடைய பிரதேசம் எங்களுக்கே உரியது என்பதனை எடுத்துக்காட்ட மேதினத்தைக் கொண்டாட வேண்டும்.

தமிழீழத்தைப் பொறுத்தமட்டில் அடக்கு முறைகள் திணிக்கப்பட்டுள்ளன. அடக்குமுறையானது எமது தமிழ் சமூகத்திலிருந்து விலகவில்லை.

எம்மத்தியில் வர்க்க முரண்பாடுகள் இருந்து கொண்டேயிருக்கிறது. எதிரியின் நடவடிக்கைகளால் எமது கைத்தொழிற்சாலைகள் செயல் இழந்து போயுள்ளன. ஒட்டுமொத்தத்தில் தமிழ் ஈழப்போராட்டத்தையே மழுங்கடிக்கும் வகையில் எமது மக்களை அழிக்க எதிரி எத்தனிக்கும் இவ்வேளையில் தமிழ் மக்களாகிய நாம் ஒன்று திரளவேண்டும்.

எமது மக்களுக்கான பல முனை தடைகளை உடைத்தெறிவதற்கும் சகல வழிகளிலும் எமது தேவைகளை அடைவதற்கும் அனைத்து தமிழர்களாகிய நாம் ஒன்றிணைவோம்.

இம்மண்மீட்பிற்காக மரணித்த மாவீரர்களின் இலட்சியத்திற்காக நாம் அணிதிரண்டு எமது ஒற்றுமையின் பலத்தை எடுத்துக் காட்டுவோம். எம்மிடையே ஒற்றுமையும், உறுதியும் இருக்கும்வரை, எதிரியால் எமக்கு ஒன்றுமே செய்யமுடியாது என்பதனை எதிரிக்கும், உலகுக்கும் எடுத்துக் காட்டுவதற்கு நாம் அனைவரும் இத்தினத்தில் ஒன்று சேர்வோம்.

தொழிற்சங்கங்கள், வெகுஜன ஸ்தாபனங்கள், சனசமூக நிலையங்கள் யாவும் அணி திரண்டு, இத்தினத்தில் எமது உறுதியையும், பலத்தையும் உலகுக்கு எடுத்துக் காட்டுவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

# இந்திய அமைச்சர் எஸ். பி. சவான் மறுப்பு

(புதுடில்லி)

இலங்கைத் தமிழ் அகதிகள் வலுக்கட்டாயமாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுகிறார்கள் என்று கூறப்படுவதனை இந்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

ராஜ்ய சபாவில் ஜனதாதள கட்சி உறுப்பினர் டாக்டர் சுப்பிரமணியசுவாமியின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே எஸ். பி. சவான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இலங்கைத் தமிழ் அகதிகளை இந்தியா வலுக்கட்டாயமாக இலங்கைக்கு அனுப்புவதாக உண்மைக்குப் புறம்பாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# காணமல் போனவர்களில் 40 பேர் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

காணமற்போனவர்கள் எனக் கருதப்படும் சுமார் 40 பேர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களின் இருப்பிடங்கள் மற்றும் விபரங்கள் குறித்து, அவர்களின் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் கொழும்பில் நேற்று முன்தினம் வெளியான அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

பாதுகாப்பு அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று, மேற்படி நபர்களை கண்டுபிடித்ததாகவும் மேலும் 340 பேர் பற்றிய விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

ஜனதா விமுக்தி பெரமுனையுடன்தொடர்புடைய ஆயிரக்கணக்கான சிங்களவர்கள் காணமல் போய்விட்டதாக பொதுமக்கள் மத்தியில் கடும் எதிர்ப்புகிளம்பியதையடுத்தே மேற்படி அதிகாரிகள் குழு இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் கடந்த இரு வருடங்களாக மேற்படி தேடுதல் நடவடிக்கை நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

## பரீட்சை பெறுபேறுகள்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர விசேடபரீட்சை (1990) க்கான பெறுபேறுகள் இந்த வார இறுதியில் வெளியிடப்படும் என பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார்.

இப்பரீட்சை 1990ம் ஆண்டு டிசம்பர் மாதம் யாழ் குடாநாட்டில்வன்செயல்கள்காரணமாக நடைபெறாது 1991ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## அவசரக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தில் பளைக் கொத்தணி, கொடிகாமம் கொத்தணி, உசன் கொத்தணி, வரணிக் கொத்தணியில் கடமைபுரியும் அதிபர், ஆசிரியர்களை, நாளை வியாழக்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்திற்கும், மட்டுவில் கொத்தணி, கைதடிக் கொத்தணி அதிபர், ஆசிரியர்களை நாளை முற்பகல் 10-30 மணிக்கு யா/ நிபேக் கல்லூரி மண்டபத்திற்கும் தவறாது வருகைதரும் வண்ணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# தமிழக சட்டப் பேரவையை பத்திரிகையாளர்பகிஷ்கரிப்பு

(சென்னை)

இந்தியாவின் பிரபல பத்திரிகைகள் மற்றும் செய்தி நிறுவனங்களின் நிருபர்கள் பலர் தமிழக சட்டப்பேரவை நடவடிக்கைகளைநேற்று பகிஷ்கரித்தனர்.

கோவைமாலை முரசு, முரசொலி, இல்லஸ்ரேட்டட் வீக்லி ஒவ் இந்தியா ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர்கள் மீது தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா கைது வாரண்ட் பிறப்பித்ததைத் தொடர்ந்தே மேற்படி நிருபர்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி மற்றும் பி. ரி. ஐ., யு. என். ஐ. ஆகியவற்றின் நிருபர்களே சட்டப் பேரவை நடவடிக்கைகளை பகிஷ்கரித்தவர்களாவர்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரி பிரிவில் இலவச தையல் பயிற்சி வகுப்பு இன்று 29-ம் திகதி புதன்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது

## 1500

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பெரும் பழுது பார்க்கப்படுவதன் காரணமாக இலங்கை அரசாங்கம் விடுத்தவேண்டுகோளைத் தொடர்ந்து இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக புனர்வாழ்வு புனர்நிர்மாணத்துறை அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு ஜனவரிமாதம் முதல் 15ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவிலிருந்து நாடு திரும்பியுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

## கருத்து பரிமாறல்

(பருத்தித்துறை)

வடமராட்சியிலுள்ள சனசமூகநிலையங்களுடனான சந்திப்பு நிகழ்வுகளில் வடமராட்சி கலை, பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. பாஸ்கரன், பிரதிப் பொறுப்பாளர் திரு. பாரிமகன், தலைமைச்செயலக கலை, பண்பாட்டுக் கழகத்தின் பணிப்பாளர் திரு. யோகேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர். (52)

# எமது உயிரை இழப்பதற்கு தாயகம் திரும்ப விருப்பவில்லை

## இலங்கை அகதிகள் பேட்டி

(சென்னை)

'இலங்கையிலிருந்து உயிரைக் காப்பாற்றும் நோக்கமாக இந்தியா வந்துள்ள நாம் மீண்டும் உயிரை இழப்பதற்கு இலங்கை திரும்ப விரும்பவில்லை.'

இவ்வாறு இலங்கை தமிழ் அகதிகள் சடலூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பி. பி. ஸி. நிருபருக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளனர்.

அவர் கள்மேலும் தெரிவிக்கையில், வடக்கு-கிழக்கில் யுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது. சுமுகநிலை இன்னமும் அங்குஏற்படவில்லை இந்நிலையில் நாம் மீண்டும் இலங்கை செல்வோமேயானால் எமது உயிருக்கு எந்தவிதமான உத்தரவாதமும் கிடையாது. எமது எதிர்காலம் வெறும் சூனியமாகவே இருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## தாயகம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பயணம் செய்வதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரையில் 7,600 இலங்கைத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரத்திலிருந்து மன்னாருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வட-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னணி கடுமையாக எதிர்த்துள்ளது. இணைப்பு குறித்து ஆளும் ஐ. தே. க, முடிவு எதனையும் இன்றும் எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வடகடல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேசங்களும் யாழ்ப்பாண பண்ணை தொடக்கம் பொன்னாலை வரையும், யாழ்ப்பாண குருநகர் தொடக்கம் அரியாலை கிழக்கு சங்குப்பிட்டி வரையும் மற்றும் தும்பளை நாகர்கோயில் தாளையடி சோலை ஆகிய பிரதேசங்களாகும்.

இந்தக் கடல் பகுதிகளில் காணப்படும் படகுகள் வள்ளங்கள் மீது கடல், தரை, ஆகாய மார்க்கமான தாக்குதல்களை இராணுவத்தினர் மும்முனைகளிலிருந்தும் மேற்கொள்வர் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## குமணா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி கப்பல் இம்முறை நேராக கொழும்பு செல்வதினால், யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து நோயாளர்களும் அவர்களின் உதவியாளர்களுமாக மொத்தம் 64 பேர் இக்கப்பலில் கொழும்புசெல்லவுள்ளார்கள்.

## பிக்குகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளை சந்திக்க யாழ்ப்பாணம் சென்ற பௌத்த பிக்குகள் குழு நேற்று முன்தினம் மாலை கொழும்பு திரும்பியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்குப் பலாலி முகாம் சென்ற இவர்கள், நேற்று முன்தினம் மாலை கொழும்பு வந்து சேர்ந்தனர்.

ஜனாதிபதி மற்றும் பல கட்சித் தலைவர்களைச் சந்தித்த பின்னர், புதிய திட்டத்துடன் மீண்டும் யாழ்ப்பாணம் செல்லவிருப்பதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

## நிலுவையின்றி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாநகரசபை மேற்கொண்டுள்ளது.

1991ம் ஆண்டுக்கான முழுச் சோலை வரிப் பணத்தையும் உடனடியாகச் செலுத்த வேண்டும் என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

சோலை வரி வசூலிக்க வரும் உத்தியோகத்தர்களுக்குச் சிரமம் கொடுக்காது, முழுத் தொகையையும் பாக்கியின்றிச் செலுத்தி, தமது பணத்திற்குரிய பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

சோலை வரிப் பணத்தைக் கட்டத் தவறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [154]

## சாரணர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மேதின சேவை ஒழுங்குகள் பற்றிய கூட்டம் நாளை வியாழக்கிழமை கோக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வடமாகாண சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு உத்தியோகத்தர்களும், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல சாரணர்கள், திரிசாரணர்கள். சாரணத்தலைவர்கள். குழுச் சாரண தலைவர்கள், உதவி மாவட்ட ஆணையாளர்கள், காங்கேசன்துறை மாவட்ட சாரணத்தலைவர்களையும், சாரணீய வழிகாட்டிகள், பொறுப்பாசிரியர்களையும் சாரணிய வழிகாட்டி பரிவைசார்ந்த அனைவரையும் கலந்து பற்றும்படி இத்துறை சார்ந்த பிரிவு ஆணையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் கன்னாதிட்டி... கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81